**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.72/2015**

**வழக்கு சாட்சி: PW.9**

**தேதி: 18.03.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **வெள்ளைச்சாமி** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **ராஜாங்கம்** | **தொழில்:** | **வி.ஏ.ஓ (ஓய்வு)** |
| **கிராமம்:** | **சிவகங்கை** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **சிவகங்கை** | **வயது:** | **60/2024** |

**3 வது எதிரி ஆஜர். 1, 2 எதிரிகள் ஆஜரில்லை. 1, 2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் தமிழக வருவாய் துறையில் கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 28.02.2013ம் தேதி நான் ஆலங்குளம் குரூப் கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து கூடுதல் பொறுப்பாக காஞ்சிரங்கால் கிராம நிர்வாக அலுவலராகவும் பணிபுரிந்தேன். அன்றைய தினம் காலை 8.30 மணியளவில் சிவகங்கை தாலுகா காவல் ஆய்வாளர் என்னையும் எனது உதவியாளர் தருமர் என்பவரையும் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்திற்கு ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக அழைத்தார். நானும் உதவியாளர் தருமரும் 8.45 மணியளவில் சிவகங்கை தாலுகா காவல் நிலையம் சென்றோம். அங்கு காவல் ஆய்வாளர் மற்றும் எதிரி சதிஷ் இருந்தார்கள். எதிரி சதிஷ் குற்றத்தை ஒப்புக் கொண்டு ஒரு ஒப்புதல் வாக்கு மூலத்தை கொடுத்தார். எதிரி சதிஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கொலைக்கு பயன்படுத்திய டாடா ஏசி வாகனத்தையும் அதற்குரிய சாவியையும் என் முன்னிலையில் எதிரி ஒப்படைத்தார். சம்பவம் நடந்த இடத்தில் சாவியையும் கானூர் கண்மாயில் வாகனத்தையும் எதிரி ஒப்படைத்தார். அதற்குரிய அத்தாட்சி **அ.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்க நடந்த விபரங்களை கூறினேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

நான் பணிபுரிவது ஆலங்குளம் குரூப். கூடுதலாகத்தான் காஞ்சிரங்காலில் பணிபுரிந்தேன். ஆலங்குளம் கிராம நிர்வாக அலுவலகம் கூத்தாண்டனில் உள்ளது. அங்கிருந்து சிவகங்கை 4, 5 கி.மீ தூரத்தில் உள்ளது. நான் பொதுவாக நான் பணிபுரியும் ஆலங்குளம் வி.ஏ.ஓ அலுவலகத்திற்கு வந்துவிடுவது வழக்கம் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் டவுனிற்குள் இருந்தேன் என்னை தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் அழைத்ததன் பேரில் சென்றேன். அப்போது மணி என்ன இருக்கும் என்றால் 8.30 மணியிருக்கும். நான் 8.45 மணிக்கு காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டேன். அவர் எவ்வளவு நேரம் வாக்குமூலம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. நான் செல்லும் போது காவல் ஆய்வாளர் விசாரித்து கொண்டிருந்தார். நான் போனவுடன் கையெழுத்து செய்துவிட்டேனா என்றால் எதிரியை பார்த்துவிட்டு கையெழுத்து செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒரு பக்கத்தில் தான் நான் கையெழுத்து செய்தேன். அதில் என்ன விபரம் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தற்சமயம் ஞாபகமில்லை. அதில் எதிரி எத்தனை இடத்தில் கையெழுத்து செய்தாரா என்று ஞாபகமில்லை. எதிரியின் கையொப்பம் தமிழா, ஆங்கிலமா என்று எனக்கு ஞாபகமில்லை. சம்பவயிடம் பனங்காடி மெயின் ரோட்டிலிருந்து 3 பர்லாங்கு தூரத்தில் இடது பக்கம் உள்ளதா வலது பக்கம் உள்ளதா என்று எனக்கு ஞாபகமில்லை. சம்பவயிடத்திற்கு நான் செல்லவில்லை என்பதால் தான் எனக்கு ஞாபகமில்லை என்று சொன்னால் சரியல்ல. வாகனத்தை கானூர் கண்மாயின் உள்வாயிலில் குறிப்பாக எந்த இடத்தில் வைத்து கைப்பற்றினார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. கைப்பற்றப்பட்ட வாகனம் மற்றும் சாவி ஆகியவற்றிற்கும் எதிரிக்கும் என்ன தொடர்பு இருந்தது என நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத பொருட்களை காவல் நிலையத்தில் வைத்து காட்டி எழுதப்படாத வெள்ளைப் பேப்பரில் என்னிடத்தில் போலீசார் கையெழுத்து பெற்றார்கள் என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தினம் காலை 8.30 லிருந்து 12.30 மணி வரை போலீசாரிடம் நான் இருந்தேன். இவ்வாறு போலீசார் விசாரணைக்கு நான் செல்வதற்கு எனது வட்டாட்சியரிடம் நான் அனுமதி பெற வேண்டுமா என்றால் அவசர அரசு வேலைக்கு அனுமதி தேவையில்லை. நான் மேற்படி சென்று வந்த பணி குறித்து எனது அலுவலக குறிப்பேடுகளில் பதிவு எதுவும் செய்யவில்லை. நான் அது போல் பணிக்கு எதுவும் செல்லவில்லை என்பதால் தான் குறிப்பு எதுவும் பதியவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி சதிஷ் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை

என்றும் நான் அங்கு செல்லவில்லை என்றும் என் முன்பாக எந்த சான்று பொருட்களும் ஒப்படைக்கவில்லை என்றும் அதற்கு அத்தாட்சி எதுவும் தயார் செய்யவில்லை என்றும் அவைகளில் நான் கையெழுத்து செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நானும் எனது அலுவலக உதவியாளர் தர்மரும் 21.02.2013ம் தேதி காலை 10 மணிக்கு சம்பவயிடத்திற்கு போனோம் என குறிப்பிட்டு சொல்லியுள்ளோம் என்றால் சரிதான்.